திரு. இ. ராமசாமி: தலைவரவர்களே, சிலோன், பர்மா தமிழர்களுக்கு வால்பாறையில் 1,000 ஏக்கர்களில் தேயிலை அல்லது காப்பித் தோட்டம் அமைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தனிக் கேள்வி போடவும்.

உவரியில் மீன் பதனிடும் தொழிற்சாலை

***561 வினா—திரு. வீ. கார்த்தீசன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், உவரியில் கிடைக்கும் மீன்களைப் பயன்படுத்தும் வகையில் அங்கு ஒரு மீன் பதனிடும் சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இல்லை.

போந்தவாக்கம்-மாதர்பாக்கம் சாலை.

***562 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், போந்தவாக்கம் முதல் மாதர்பாக்கம் வரையுள்ள பேருந்துகள் செல்லும் சாலையைப் பெருவழித் துறையில் எடுத்து தார்ச்சாலை போடும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச் சாலையைப் பெருவழித் துறைக்கு மாற்ற 1973-74 ஆம் ஆண்டுதான் மாவட்ட வளர்ச்சி மன்றம் குறைந்த முதன்மையுடன் பரிந்துரை செய்தது. அதனால் இதுவரை இச் சாலையை பெருவழித் துறைக்கு மாற்ற முடியவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, ஆந்திர எல்லையில் இருக்கும் இந்த ஊராட்சி ஒன்றியச் சாலையில் நீண்டநாட்களாகப்